திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விவசாயப் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்கள் முன்னுலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது தனி அதிகாரியின் நிர்வாகத்தில் இருப்பதால் பல இடங்களில் இருக்கும் கருவிகள் பயன்படுத்தப்படாமலும், பிரயோசனம் இல்லாமலும் இருப்பதால் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை அமைக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. கா. சு. தண்டபாணி: தலைவரவர்களே, கூட்டுறவு விவசாயப் பணி மையங்கள் இல்லாத ஒன்றியங்களில் துணை மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இதுபோன்ற நிறுவனங்களில் இதற்குமுன் நடந்த ஆட்சியில் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி தண்டராம்பட்டு ஒன்றியத்தைப் பற்றியது. வேறு தகவல்கள் அமைச்சரிடம் இருக்காது.

வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது குறித்து.

*திரு. துரை முருகன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்த நேரத்தில் ஒரு முக்கியமான பிரச்னையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாக இந்த அவையிலே நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்றால் அரசாங்கம் நாங்கள் எந்தக் கட்சியிலே இருந்தாலும் எங்களை முறையாக நடத்த வேண்டும்.

1978 மார்ச் 21] [திரு. துரை முருகன்]

24 ஆம் தேதி என்னுடைய தொகுதியில் இராணிப்பேட்டையில் நௌலாக்கில் பண்ணை தினம், உழவர் பெருவிழா கொண்டாடப்பட இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்குகிறார். டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் வருகிறார். மாண்புமிகு அமைச்சரவர்கள் வருகிறார்கள். நான் பணிவன்போடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதிநிதியாகிய எனக்கு அந்த விழாவிற்கு ஒரு அழைப்பு இல்லை, அதிலே என்னுடைய பெயரும் இல்லை. அரசாங்க விழாவில் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.யை அழைக்க வேண்டும் என்று ஜீ.ஓ. இருக்கிறது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு நீங்களே மதிப்பு கொடுக்கவில்லை என்றால் நாங்கள் யாரிடத்தில் சொல்வது ? எப்பொழுதுமே ஜனநாயகத்தில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லியாகி விட்டது. ஒழுங்குப் பிரச்னையைச் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. துரை முருகன் : என்னுடைய தொகுதியில் நான் ஆற்ற வேண்டிய பணியை எப்படி ஆற்றுவது ? இது பிரிவிலெஜாகவே வரும். நீங்கள் சொன்னால் நான் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்து விட்டுப் போகிறேன். மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரும்பான்மை பலம் உள்ள கட்சியில் இருக்கிறார். அவருக்கு நாங்கள் மதிப்பு தருகிறோம். அதேபோல் அந்த இடத்தில் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எனக்கு மதிப்பு கொடுக்கப்படவில்லையென்றால் அமைச்சர் வரும்பொழுது தொகுதிப் பிரச்னைகளை எப்படிச் சொல்ல முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒழுங்குப் பிரச்னையை நான் புரிந்துகொண்டேன்.

[முற்பகல் 9-50]

நான் சொன்னாலும் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். உங்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டேன். கனம் உறுப்பினர் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னை அவைத் தலைவருக்கு உட்பட்டதா என்பதை நான் ஆய்வுக்கு எடுத்து, அவைத் தலைவர், அதிலே ஈடுபட்டு சொல்லக்கூடியதா என்பதையும் பார்த்து, அரசுத் தரப்பிலேயும் கேட்டு (குறுக்கீடு) அதற்கான முடிவை பின்னாலே நான் உறுப்பினருக்குச் சொல்கிறேன். உங்களுடைய ஒழுங்குப் பிரச்னையைப் நான் புரிந்து கொண்டேன்.